முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கணபதிதாசர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.02.2019, வியாழக்கிழமை

1. **இருகரம் கூப்பி அழைத்துமே**
**இடர்களை மக்களுக்கு போக்கிடும்**
**குருபரா எங்கள் ஆறுமுகனின்**
**குறையிலா சக்தியாக வந்த அரங்கா**

2. அரங்கா உன் பெருமை அறிய
அகிலமே தேறுமெனக் கூறி
தரங்கையில் **விளம்பி சால் திங்கள்**
**தக்க மூவையோர் திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 16ம் நாள் 28.02.2019, வியாழக்கிழமை)**

3. **வாரமதில் நித்ய பிரசன்ன ஆசியை**
**வழங்குவேன் கணபதிதாசர் யானும்**
பாரமான சத்ரு ருண ரோக
பாதகம் தரும் கஷ்டங்களெல்லாம்

4. எல்லாம் விலகி மக்களிடை
என்றும் மகிழ்ச்சி அமைதி
வல்லமைபட நல்லவை கூடி சிறக்க
வறுமை அணுகாது இருக்க

5. இருக்கவே நித்ய பூசையாம்
ஏழாம் படை வீட்டின் ஞானபூசை
கருத்தாக உலகோர் வந்து
கலந்துமே ஆசி தீட்சை பெற

6. தீட்சையுடன் அரங்கன் தரும்
திருவருள் ஊட்டும் அருளமுது உண்டு
மாட்சிமைபட அகலா பூசை
மண்ணுலகில் அனுதினமும் செய்து வர

7. வருகவே பெரும் மாற்றமும்
வல்லமையான மனோபலமும்
முருகன் தயவால் ஆயுள் கீர்த்தியும்
முழுமை ஞானமும் கண்டடைவர்

8. அடைவரே ஆறுமுகன் தரும்
அற்புத ஞான பாதுகாப்பை
சோடை போகா ஏற்று சிறப்பர்
சுத்தநெறி கண்ட மக்களெல்லாம்

9. எல்லோரும் அரங்கன் தேடிடும்
இணையிலா வருங்கால ஞானிகளுள்
வல்லமை பெற்ற ஒருவராகியே
வருமுலகில் தேர்வு கண்டு சிறப்பர்

10. சிறப்பு தரும் ஞான குருவே
சிந்தை தெளிவிக்கும் தியான குருவே

மறுப்பிலா வரம் தரும் மாதவசியே
மக்களின் காப்பாளனாக வந்த

11. வந்த ஞானியே வள்ளலே
வருமுலகில் உன்னால் பெருமாற்றம்
கந்தவேலன் சக்தி கொண்டமையும்
கண்டுரைத்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கணபதிதாசர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

கலியுகத்தின் மாயையுள் அகப்பட்டு துன்புறும் மக்களை, வாருங்கள் மக்களே துன்பம் போக்கிட வழியொன்று உண்டு என்றே இருகரம் கூப்பி மக்களை அழைத்து வழிநடத்தி மக்களின் துன்பங்களைப் போக்கி காத்திடும் குருபரனே ஞானத்தலைவனாம், ஞானிகள் எங்களின் தலைவன் முருகப்பெருமானின் சக்தியை குறைவின்றி முழுமையாக பெற்று முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகாதேசிகனே அற்புதம்மிக்க உமது பெருமைகளை உலக மக்கள் அறிந்து உம்மை ஏற்றுக்கொண்டால் உலகமே கடைத்தேறிடுமப்பா என்றே யுகமாற்ற வல்லமைமிக்க அவதார ஞானி அரங்கா உமது புகழை உலகமெலாம் கூறியே உலக மக்கள் நலம் பெறவே **விளம்பி வருடம் மாசி மாதம் 16ம் நாள் 28.02.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கணபதிதாசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகா கணபதிதாசர்.

மக்களுக்கு பாரமாயும், துன்பம் விளைவிக்கும் விதமாயும் உள்ள எதிரிகளின் தொல்லையும், கடன் தொல்லைகளும், நோய் துன்பங்களிலிருந்தும் மற்றைய பாதகமான துன்பங்கள் எல்லாம் மக்களிடமிருந்து விலகி மக்களிடையே என்றும் மகிழ்ச்சியும் அமைதியும் பெருகி வல்லமைபட நல்லவைகள் பெருகி சிறப்படைந்து வறுமை துன்பம் ஒரு போதும் அணுகாமல் இருந்திட நித்ய பூசைகளாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலில் நடக்கின்ற தினசரி பூஜைகளிலே வந்து கலந்து, கருத்துடன் பூஜைகளை தவறாமல் செய்து வருவதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து திருவடி பணிந்து பயபக்தியுடன் ஆசி தீட்சை உபதேசம் பெற்று, ஆறுமுக அரங்கமகா தேசிகனார் நடத்தும் தான தர்மப் பணிகளுக்கு தர்மங்களை செய்வதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகன் தருகின்ற அருளமுதமாம் திருவருளாம் தெய்வத்தின் அருள் பெற்ற ஞானிகளின் ஆசி பெற்ற குடில் உணவினை உண்டு பெருமையுடன் நித்ய பூசைகளை அனுதினமும் செய்துவர பெரும் மாற்றங்கள் எல்லாம் உருவாகிடும், மனோபலம் பெருகிடும். முருகப்பெருமானின் தயவால் அருளால் நீடிய ஆயுளை பெற்று முழுமை பெற்ற ஞானத்தையும் பெறுவார்கள்.

அவர்கள் எல்லாம் முருகப்பெருமான் தருகின்ற அற்புதமான ஞான பாதுகாப்பையும் பெற்று சிறப்படைவார்கள். ஆறுமுக அரங்கன் வகுத்திட்ட தூயநெறியினை பின்பற்றி ஞான வழிதனிலே வழுவாது கடைப்பிடித்து வாழ்ந்திடும் மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகாதேசிகனார் விரும்புகின்ற ஞானமடைந்து ஞானிகளாக ஆகும் தகுதியை பெற்றவர்களாக ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கருணையாலே வழிநடத்துதலினாலே ஞானிகளாக ஆகும் வல்லமை பெற்றவர்கள் ஒருவராகி அரங்கமகானால் ஞானிகளாக ஆக்கும் தேர்வினிலே தேர்வடைந்து சிறப்படைவார்கள்.

எல்லாவிதமான சிறப்புகளையும் நம்பினோர்க்கு அளித்து காக்கின்ற மகா ஞானகுருவே, சிந்தைதனை தெளிவித்து கடைத்தேற்றும் தியான குருவே, நம்பினோர்க்கு தடையின்றி மறுப்பின்றி வரமளிக்கும் மகா ஞானதவசியே உலக மக்களை காத்திடவே அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே அளவிலாது தர்மங்களை செய்திடும் வள்ளலே, வள்ளல் ஞானியே, அரங்கமகாதேசிகனே, வருங்காலங்களிலே இவ்வுலகினில் உம்மால் அற்புதம்மிக்க பல பெரும் மாற்றங்கள் எல்லாம் முருகப்பெருமானின் அருள் சக்தியின் துணையுடன் உண்டாகி உலகப் பெருமாற்றம் உம்மால் நடந்தேறிடுமப்பா என அரங்கனின் அற்புதங்களை உலகறிய உரைக்கின்றார் மகான் கணபதிதாசர்.

–சுபம்–